
# அயலக நண்பர்கள்

ஒருவர் மற்றவருடன் இணைந்து உதவும் கரங்கள்
கூரைகளை தென்னோலைகளால் அமைக்க
களைப்பினை எவரும் உணரா வண்ணம்
நட்புறவுகள் என்றும் நினைத்திருக்கும்.



அயலவர் ஒன்று கூடி வீடுகளின்
குப்பை கூழங்களை அகற்ற
பெரியோர் செயலை அவதானித்த சிறுவர்
மகிழ்ச்சி நிறை மனதுடன் கரங் கொடுத்தனர்.



இறைவனுக்கு அன்பு காட்டுவோம்.
அனைவருக்காகவும் வேண்டுதல் செய்வோம்.
நற்குணங்களைக் கற்றுக் கொள்வோம்.
அனைவருடனும் நட்புறவு கொள்வோம்.

## செயற்பாடு

1. பாடசாலைச் சுற்றாடலை சுத்தம் செய்யும் சிரமதான நிகழ்ச்சி ஒன்றை ஒழுங்கு செய்யுங்கள்.

2. வெளிநாட்டில் வாழும் ஒரு நண்பனுக்கு/நண்பிக்கு கடிதம் எழுதவும்.